RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI:10.34256/irjt22344

OPEN ACCESS

# கொங்கு வட்டார வழிபாட்டுச் சடங்குகளில் பலியிடுதல்

ப. காளீஸ்வரமூர்த்தி [அ, *], இரா. வீரபத்திரன் [அ]

[அ] தமிழ்த்துறை, தமிழ்த்துறை, கற்பகம் உயர்கல்விக் கழகம், கோவை-21, தமிழ்நாடு, இந்தியா

# Sacrifice in Kongu Local Rituals

P. Kaleeswaramoorthy [a, *], R. Veerapathiran [a]

[a] Department of Tamil, Karpagam Academy of Higher Education, Coimbatore-21, Tamil Nadu, India

* Corresponding Author: kaleeswaramoorthy@gmail.com

Received: 28-03-2022
Revised: 19-06-2022
Accepted: 02-07-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

A man who does not know the anger of nature and the changes in the climate, is running a power of himself. We must sacrifice itself and the people of himself by sacrificing other lives so that we have been harmed by it. Thus, from the beginning to the present, the sacrifice of worship has been carried out as an important ritual. This review illustrates the importance of sacrifice and the modern changes they have taken.

**Keywords:** Local Rituals, Worship, Sacrifice, Nature

## முன்னுரை

இயற்கையின் சீற்றங்களையும் பருவநிலையில் ஏற்படும் மாற்றங்களையும் அறிந்திராத மனிதன் தன்னைத்தாண்டி ஏதோ ஒரு சக்தி நம்மை இயக்கிக் கொண்டிருக்கிறது. அதற்குநம்மால் தீங்கு ஏற்பட்டுவிட்டது என்றதனால் அதனைச் சாந்தப்படுத்தும் வகையில் பிற உயிர்களைப் பலியிட்டுத் தன்னையும் தன்னைச் சார்ந்த மக்களையும் காத்துக்கொண்டிருக்க வேண்டும். 'பலியிடுதலால் நன்மை உண்டாகும் என்று கருதி போலி (பாவனை) மந்திரச் சடங்குகள் செய்தல் பண்டையக்கால இனக்குழு மக்களின் சமயத்தில் முக்கியக்காரணமான அம்சமாகும்' என்பார் நா. வானமாமாலை. இவ்வாறு தொடக்ககாலத்திலிருந்து தற்காலம் வரை சிறுதெய்வ வழிபாட்டில் பலியிடுதல் ஒரு முக்கியமான சடங்காக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாய்வு கொங்கு வட்டார வழிபாடுகளில் பலியிடலின் முக்கியத்துவத்தையும் அவைபெற்றுள்ள தற்கால மாற்றங்களையும் விளக்குவதாக அமைகிறது.

## பலியிடுதலில்

1. உயிர்களைப் பலியிடுதல் (விலங்குகள், பறவைகள்)

2.பிறபொருட்களைப் பலியிடுதல் (மலர், தேங்காய், எலுமிச்சம் பழம், வாழைப்பழம்)

என்று இரண்டுவகை மரபுகள் காணப்படுகின்றன. இவ்வாறான இருவகை மரபுகளில நாட்டுப்புறச் (கிராமப்புற) சமூகத்தில் உயிர்களைப் பலியிடுதல் பெருவழக்கமாகக் காணப்படுகிறது.

## பலியிடுதலின் பின்பற்றப்படும் மரபுகள்

சேவல், கோழி, ஆட்டுக்கிடாய், ஆடு, பன்றி, எருமைக்கிடாய், பூசணிக்காய், எலுமிச்சம்பழம், தேங்காய் முதலியன பலியிடப்படுகின்றன.

மஞ்சள் தண்ணீரில் நீராட்டி, பொட்டிட்டு மாலை சூட்டிய பின்னர் பலியிடுவர்.

சில கோயில்களில் தெய்வத்துக்கு முன்னர் திரையிட்ட பின்பு பலிகொடுப்பார்கள்.

ஆட்டுக்கிடாய் பன்றி, எருமை போன்றவற்றை வெட்டும் முன்னர் தெய்வத்தின் முன்னர் நிறுத்தித் தீர்த்தம் இட்டு மூன்றுமுறை தலையசைத்த பின்னர் (துளுக்கிய பின், துளுக்குதல் பேச்சுவழக்கு) வெட்டப்படும். ஒரே வெட்டில் தலைவேறு உடல்வேறாக வெட்டப்படும் இல்லையெனில் ஏதேனும் குறையிருப்பதாக கருதுவர். வெட்டப்பட்ட விலங்கின் வலதுகாலில் முழங்காலின் கீழ்ப்பகுதி வெட்டப்பட்டு அந்த விலங்கின் வாயில் வலது காலினை வைத்து தெய்வத்திற்கு எதிர்த்திசையில் வைப்பார்கள். இங்கு வெட்டப்படும் ஆண்எருமைக்கிடாவின் உடலும் தலையும் எதிரில் உள்ள குழிக்குள் (தெய்வத்தின் எதிர்திசையில் வெட்டப்பட்ட குழியினை குண்டம் என்று கூறுவர்) போட்டு விடுவர் மற்ற விலங்குகளைப் போன்று தலையை தனியாக வைத்து அதன் வாயில் வலதுகாலின் ஒரு பகுதியை வைக்க மாட்டார்கள். இத்தகைய வழக்கம் ஆட்டுக்கிடா வெட்டும்போது மட்டும் பின்பற்றப்படுகிறது.

## இரத்தப்பலி பாவனைச்சடங்கு

இரத்தபலி கொடுக்க இயலாதவர்கள் உயிர்பலியினைப் போன்றே பாவனை முறையாக (தாவர வழிபாடாக) பூசணிக்காய் அல்லது எலுமிச்சம் பழங்களை நான்கு துண்டுகளாக வெட்டி அதன் அனைத்து உட்பகுதிகளிலும் குங்குமம் தடவி இரத்தப்பலி வழிபாட்டினைப்போன்று பாவனை முறையினைப் பினப்பற்றி சைவ வழிபாட்டினை மேற்கொள்கின்றனர். வைதீக மரபு சார்ந்து ஒருவகையான இரத்தப் பலியிடும் வழக்கத்தினை உடைய மக்களைத் திருப்திப்படுத்தும் பாவனைச் சடங்காக இதனைக் கருதலாம்.

விலங்குகளைப் பலியிடுவதற்காகப் பயன்படுத்தும் அரிவாளினைச் சுத்தம் செய்து முதலில் எலுமிச்சம்பழத்தை இரண்டு துண்டாக வெட்டி அரிவாளின் வலது மற்றும் இடது பகுதியில் குங்குமம் தடவிவைத்து வழிபடுகின்றனர். இவ்வாறான வழிபாட்டை மேற்கொண்டால் தாங்கள் மேற்கொள்ளும் பணி சிறப்பாக நடைபெறும் என்பது அவர்களின் நம்பிக்கையாகும். இப்பணியினை மேற்கொள்ளும் நபருக்கு அந்த அரிவாளால் எந்தத் தீங்கும் (காயங்கள்) ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் இவ்வாறு வழிபடுகின்றனர். சடங்கியல் புனிதப்படுத்தல் நிலையில் பொதுப்பயன்பாட்டில் இருந்த வெட்டும் கருவியைப் புனிதத்தளத்திற்கு இட்டுச் சென்று தெய்வத்திற்கான வெட்டுதல் பணிக்கு உரியதாக மாற்றுதல் சடங்காகவும் இதனைப் புரிந்து கொள்ளலாம்.

பலி கொடுக்கும் விலங்கு பறவைகள் குறையுள்ளதாக இருக்கக்கூடாது (கண்குருடு, நோய், உடல் ஊனம்). நரி, ஓநாய், கழுகு போன்ற மாமிச உண்ணிகளிடமிருந்தும் பறவைகளிடமிருந்தும் மாமிசம் உண்ணும் பழக்கத்தையம் வேட்டையாடுதலையும் கற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

## பலியிடுவதின் எச்சங்கள்

உணவைத்தேடும் முதலநிலை மனிதனின் தொடர்ச்சியே. வேட்டை தொழிலினை உணவிற்காக மேற்கொண்டனர். அதன்பின்னர் வேளாண்மைப் பணியினை மேற்கொள்ளும் போது முந்தையதன் தொடர்ச்சியாக வேட்டைப் பணியும் நடைபெற்றது. உணவிற்காக விலங்குகளைத் தேடிச்சென்று வேட்டைப் பணியினை மேற்கொண்டது முதல் நிலை. நிலையாக ஓரிடத்தில் தங்கு பயிர்த்தொழிலை மேற்கொள்ளும்போது பயிரினை அழிக்க வந்த விலங்குகளை வேட்டையாடியது இரண்டாம் நிலை. மலைப் பகுதிகளை ஒட்டிய வேளாண்மை நிலப்பகுதிகள் பண்டைய கால மக்களின் வாழ்வியலின் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன. மக்கள் கூட்டம் கூட்டமாக ஒரிடத்தில் தங்கி நிலங்களை உழுது பராமரிக்க வேளாண்மைப் பணியினை மேற்கொண்டது மூன்றாம் நிலையாகும். இதன் தொடர்ச்சியாக நாகரீக வாழ்க்கையும் கிராமப்புறங்களும் தோன்றின.

நிலையான வேளாண்மைப் பணியினைப் போன்று இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இயற்கையினைத் தெய்வமாக வழிபட்டு இரத்தப்பலியிட்டு வேட்டைப்பணியினைப் போன்று (பாவனை) செய்து வழிபாட்டினை மேற்கொள்கின்றனர்.

மற்றொரு செய்தியாக வேளாண்மை நிலத்தைக் காவல்புரியும் ஆண்கள் அப்பகுதியில் உள்ள விலங்குகளுடன் போராடி இறந்துவிட்டால் அவர்களைக் காவல் தெய்வமாக வைத்து வழிபட்டனர் என்பதாகும். இவ்வழிபாடு பிற்காலத்தில் கருப்பணசாமி, முனியப்பன், வேட்டைக்காரன், பட்டத்து அய்யன், சூரமடை அய்யன், என்ற பெயர்களில் காவல் தெய்வங்களாக வழிபடப்பட்டு வருகிறது.

## வேட்டைச் சமூகத்தின் எச்சங்கள்

வேட்டைக்காரன் கோயிலின் இரவு வழிபாட்டின்போது தெய்வத்தின் அருள் பெற்ற ஒருவர் வேட்டைக்குத் தேவையான கத்தி, அரிவாள், தீப்பந்தம், பாத்திரம் ஆகியவற்றை எடுத்தக்கொண்டு ஊர் எல்லையில் அல்லது வனப்பகுதியில் உள்ள காட்டிற்குள் சென்று வேட்டையாடுதலைப் போன்று பாவனை செய்துவிட்டு மீண்டும் இருப்பிடத்தை நோக்கித் திரும்பிவருவார். அப்படி வரும் நிலையில் கோவிலின் அருகில் ஊரின் எல்லை ஆட்டுகிடா ஒன்றினை உயிருடன் வயிற்றுப் பகுதியில் குத்திக்கிழித்து அதன் இரத்தத்தைக்குடிப்பதுபோல் பாவனை செய்கிறார். (இம்முறையானது காட்டில் உள்ள சிங்கம், புலி, சிறுத்தை பொன்ற மாமிச உண்ணிகள் ஒருவிலங்குகளை வேட்டையாடி அதன் இரத்தத்தை முழுமையாக குடித்துவிட்டு கொல்லப்பட்ட விலங்கின் மாமிசங்களை உட்கொள்ளும் இதே போன்று சிறுதெய்வ வழிபாட்டுத் தலங்களிலும் ஆட்டுக்கிடாயின் இரத்தத்தை குடித்து அதன் மாமிசங்களை பகிர்ந்து சிறுசிறு கூறாகப் பிரித்து அங்கு வழிபாட்டுக்கு வந்த அனைவருக்கும் பகிர்ந்தளிப்பர். இந்த முறை பண்டைய கால வேட்டைச் சமூகத்தின் எச்சங்களாகவே கருதப்படுகின்றன.

இம்முறையினை விலங்குகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமானால் ஒரு விலங்கு தன்னுடைய தேவைக்கும் தன்னைச் சார்ந்து இருக்கும் குட்டிகளுக்குத் தேவையான மாமிசங்களை வேட்டையாடிக் கொண்டு வந்து கொடுப்பதைப் பிரதிபலிப்பதாயுள்ளது. அதாவது தன்னைச் சார்ந்து வாழும் குழு மக்களுக்காகத் தன்னுடைய வலிமையைப் பயன்படுத்தி வேட்டையாடும் வேட்டைச் சமூகக்குழு வாழ்க்கையின் எச்சமாக உள்ளது.

கால ஓட்டமும் மக்கள் தொகைப் பெருக்கமும் வேட்டைச் சமுதாயத்தின் எச்சங்கள் என்ற மூன்றாம் நிலையில் மாற்றம் நிகழக் காரணமாக அமைந்தது. ஆட்டுக்கிடாவினைத் தெய்வத்தன் முன்பு இரத்தப்பலியிட்டு அவற்றின் மாமிசத்தைத் தன்னுடைய உறவினர்களோடு சமைத்து உண்ணும் நடைமுறையைப் பின்பற்றி வருகின்ற முறையான உறவினர்களோடு சேர்ந்து வழிபடும் விழிபாட்டு முறை குழு வாழ்வின் எஞ்சிநிலைத்தவையாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

## பலியிடல்களில் பிற்கால மாற்றங்கள்

'பலிகொடுப்பதன் நோக்கம், தெய்வத்தைத் திருப்திப்படுத்துவதே. அதாவது ஆவியாகிய தெய்வங்கள் இரத்த தாகங்கொண்டவை. ஆகவே மிருகங்களைப் பலிகொடுத்து தெய்வத்தின் முன் சிந்தவிடும் இரத்தத்தைத் தெய்வம் ஏற்றுக்கொள்கிறது. உடற்பகுதியாகிய கறியை மனிதன் உண்கிறான். இக்கருத்து ரோமன் கத்தோலிக்கச் சமயத்திலிருந்து வந்ததாக இருக்கலாம் என்று பிஷப்வொய்ட் குறிப்பிடுகிறார்' (Ganapathiraman, 1986).

## 16 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்கள்

கிருஸ்துவ சமயத்தார் 16-ஆம் நூற்றாண்டு வாக்கில்தான் தமிழகம் வருகிறார்கள். ஆனால் சங்ககாலம் தொட்டே தெய்வத்திற்குப் பலியிடும் மரபு தமிழர்களிடையே நிலைபெற்றுவிட்டது. திருநெல்வேலிப் பகுதியில் ரோமன் கத்தோலிக்க சமயத்தின் பரவலும் ஆதிக்கமும் மிகுந்திருப்பதும்,

அச்சமயம் சார்ந்து தமிழரின் பலியிடும் சடங்கின் மீதான விருப்பும்தான் கணபதிராமன் தவறான முடிவை அடையக்காரணம்.

வடமொழியின் தாக்கம் அதிகரித்த பின்னரே தெய்வ உலகம், ஆவியுலகம் தோன்றியிருக்க வேண்டும். அதற்கு முன்பு இவ்வாறான வழிபாட்டு மரபுக் கதைகள் தோன்றவில்லை. தெய்வங்களுக்கு இரத்தப்பலியிட்டால் மனிதனுக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படாது என்று நம்பிக்கை வைத்து வழிபட்டு வருகின்றனர்.

திராவிடத் தெய்வங்களுக்கு பலிகொடுக்கம் முன்னர் எருமை, பன்றி, ஆடு, சேவல் முதலியவற்றிற்கு மாலையிட்டுப் பூசைசெய்த பின்னர் வெட்டுகின்றனர்.

இத்தகைய வழிபாட்டு முறை வேட்டைச் சமுதாயத்தில் இரந்து தெய்வீகத்தனமான தூய்மைப்படும் படுத்தும் நிலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. உணவுகளைப் பராமரித்து உண்ணும்முறை தெய்வீகத்தனத்தை விளக்குகிறது.

## பலியின் போது பின்பற்றப்படும் மரபுகள்

கள ஆய்வில் பலியின்போது கடைப்பிடிக்கப்படும் மரபுகள் பற்றி தகலாளர்களிடம் கேட்டறிந்தபோது பல்வேறு விதமான காரணங்களைத் தகவலாளர்கள் எடுத்துரைத்துச் சான்றுகளுடன் பகிர்கின்றனர். முதல் நிலையில் பலியிடுதலுக்கான காரணம் ஆண் விலங்குகளை மட்டுமே பலியிட வேண்டும். ஊனமுற்ற விலங்காக இருத்தல் கூடாது. சரியான காலகட்டங்களில் வேண்டுதல்களை நிறைவேற்ற வேண்டும், மீறினால் தெய்வத்தால் துன்பம் நேரும் என்றும் கூறுகிறார்கள். ஆண் விலங்குகளைப் பலியிடுவதற்கான காரணம் என்ன? பெண்விலங்குகளை உயர்வாகவும் வளமையின் சாதனமாகவம் (உற்பத்திப் பொருளாகவும்) பார்க்கிறார்கள். ஏனெனில் ஆண் விலங்குகளின் தேவை குறைந்த நிலைமையிலேயே காணப்படுகிறது. (உதராணமாக தகவலாளர் கூறும் செய்தி ஒரு பட்டி ஆடு வைத்திருக்கிறோம் என்றால் ஒரு ஆட்டிற்கு ஒரு ஆண் ஆடுகிடா தேவையில் பட்டியில் 100 ஆடுகள் இருக்குமானால் அதற்கு 5 முதல் 6 ஆண் ஆடுகள் இருந்தால் போதும் நிறைய ஆண் ஆடுகள் வைத்திருப்பதால் பயன் இல்லை என்று கூறுகிறார்'.

மேற்கூறிய தகவலாளரின் சான்றுகளை முழுமையாக உற்றுநோக்கி காண்போமானால் இதற்குள் இரண்டு காரணங்களை முன்வைத்துப் பார்க்க இயலும். என்னவெனில் பயன்பாட்டில் அடிப்படையில் குறைந்த அளவு வைத்துக்கொண்டு எஞ்சியதை உணவிற்காகப் பயன்படுத்தல் ஒன்று. இரண்டாம் நிலை வேட்டை மற்றும் வேளாண் சமூகத்தில் மக்களுக்காகவும் குழுவிற்காகவும் வாழ்ந்து இறந்த வீர மரணமுற்ற ஆண்களுக்கு அவர்களின் பயன்பாட்டினையும் சிறப்பினையும் போற்றும் வகையிலும் அவர்களை வழிபட்டால் தங்களுக்கு ஏற்படும் தீமையிலிருந்து தங்களைப் பாதுகாப்பார்கள் என்ற அச்சவுணர்விலும் ஆண் விலங்குகளைப் பலியிடும் மரபு தோன்றியிருக்க வேண்டும்.

ஆனால் சிறுதெய்வ வழிபாட்டுத் தலங்களில் பெண் விலங்கினைப் பலிகொடுக்கும் வழக்கம் கள ஆய்வில் இரண்டு இடத்தில் மட்டும் கண்டறியப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம் பெரியகாமாட்சியம்மன் கோவிலில் குட்டியை ஈனும் பருவத்தில் உள்ள ஆட்டின் வயிற்றைக் கிழித்து அந்த ஆட்டையும் குட்டியையும் பலிகொடுக்கின்றனர் (தகவலாளர் கே. முருகேசன், வயது.59) (23).

இதே போன்று தங்களுடைய இருப்பிடப் பகுதியில் திருட்டுப்போனால் திருடர்களால் பொருள் இழப்பு ஏற்பட்டால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவரும் தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி தாலுக்கா பகுதியை ஒட்டிய வனப்பகுதயில் அமைந்துள்ள வெள்ளையப்பன் கோவிலில் அமைந்துள்ளது. இந்த தெய்வம் நாமக்கல், சேலம், தருமபுரி அனைத்தும் பிரியும் மலைப்பகுதியில் தருமபுரி மாவட்ட எல்லைக்குட்பட்ட இத்தெய்வக் கோவிலில் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய வீட்டில் பொருட்கள் திருட்டுப்போனால் கோழியை (பெண் கோழி) உயிருடன் வேலில் குத்தி வழிபடுகின்றனர். கோவிலின் பின்புறம் இதற்கென தனிஇடம் அமைக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் இந்த நேர்த்திக்கடனை நிறைவேற்றுவர் இவ்வாறு செய்தால் திருட்டுப்போன பொருட்கள் திரும்ப கிடைக்கும் இல்லையென்றால் கோழியின் உயிர் எப்படி

துடிதுடித்து இறக்கிறதோ அதே போன்று திருடர்களும் இறந்து விடுவார்கள் என்று நம்பிக்கை கொண்டுள்ளனர்'.

பெண்தெய்வ வழிபாட்டுத்தலங்களில் தான் பெண் விலங்குகளைப் பலியிட்டு வருகிறார். இத்தரவுகளை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள கருக்கண்காட்டு வலசுப்பகுதிக்கு அருகில் உள்ள வேலாத்தாள் என்னும் தெய்வத்திற்கு பெண் செம்மறியாடு, பெண் கோழியினைப் பலியிட்டு படையலிட்டு வழிபடுகின்றனர். இந்த வழிபாட்டுமுறை காலம்காலமாக முன்னோர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இதனை நாங்களும் தொடர்ந்து வழிபட்டு வருகிறோம் எனறு தகவலாளி தெரிவிக்கிறார்'. இதற்கு தகவலாளர் வேறு ஒரு கதையினை வழிபாட்டிற்கு தொடர்புடையதாக கூறுகிறார்.

பலியிடுதல் என்பது அடிப்படையில் தீமையை மாற்றுவிக்கப் பயன்படும் பொருள். இதனைப் பலியாடு என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்கள். மனிதனின் மீது உண்டாகும் தீயசக்தி, நோய், கண்ணேறு, துரதிருஷ்டம் போன்றவற்றைப் பலியாட்டின் மீது எற்றிப் பலியிடும் போது அந்தக் குடும்பத்தின் மீது உள்ள குறைகளும் பலியிடப்படும் ஆட்டுக்கிடாயுடன் அழிந்துவிடும் என்பர்.

தெய்வங்களை காலவரிசைப்படுத்திக் கூறும் பொழுது அதிகளவில் ஆண் தெய்வங்களே முன்னிலை வகிக்கின்றன. ஏனெனில் முதலில் இயற்கையைக் கண்டு அஞ்சிய ஆதிமனிதன் ஏதோ ஒரு சக்தி தன்னை ஆட்கொள்வதாக நினைத்து அதனை வழிபடலாயினான். அதனைத் தொடர்ந்து குழுத்தலைவர்கள், காவல்புரிந்து இறந்தவர்கள், வேட்டையின் போது உயிர்நீத்த வீரர் என்று பட்டியல் நீண்டுகொண்டே செல்லும். இதனுடைய எச்சங்களாகவே வேளாண்மை நிலப்பகுதிகளில் தென்மேற்கு எல்லைப் பகுதிகளிலும், கிணற்றுமேடுகளிலும் நீர்நிலைகளின் மேற்பகுதிகள், வழிப்பாதைகள், மேய்ச்சல் நிலங்கள் ஆகிய இடங்களில் காணப்படும் கருப்பராயன், முனியப்பன், வேட்டைக்காரன் என்ற பொதுப்பெயர்களிலேயே அதிகமாக வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய தெய்வங்களே கிராமப்புற தெய்வ வழிபாட்டில் அதிகளவில் காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட தரவுகளை ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால் பெண்தெய்வ வழிபாடுகள் எனப்படுபவை குறைந்தே உள்ளது. நூற்றுக்கு பத்து சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளன. வேளாண்மை நிலப்பகுதிகளில் உள்ள அனைத்து நிலங்களிலும் காவல் தெய்வம் (எல்லைக்காவல்) காணப்படுகின்றன. ஒரு சில பெண்தெய்வங்கள் மட்டுமே இருக்கின்றன. அவற்றில் மழை வேண்டிய வழிபாட்டின் அடிப்படையில் கோவை மாவட்டம் அன்னூர் தாலுக்கா குன்னத்தூர் பகுதியில் உள்ள பொன்னுகிரியம்மன் என்னும் தெய்வத்தை வேண்டி வழிபட்டால் (விழா நடத்தினால்) மறுநாள் மழைபொழியும் என்ற நம்பிக்கை அப்பகுதி மக்களிடையே நிலவுகிறது.

நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கு செல்லிக்காட்டு அம்முச்சி என்ற தெய்வத்தை வணங்கி வழிபட்டால் குழந்தைகளுக்கு ஏற்பட்ட கண்ணேறு, மண் திண்ணும் பழக்கம் ஆகியவற்றைப் போக்கும் என்று நம்பிக்கை கொண்டு இன்று வரை பின்பற்றி வருகின்றனர். இத்தெய்வம் மக்களோடு மக்களாக கோவை மாவட்டம் அன்னூர் தாலுக்கா குருக்கம்பாளையம் பகுதியில் ஊர்மக்களுக்கு நல்வழிகாட்டும் வகையில் நூறு ஆண்டகளுக்கு மேல் வாழ்ந்து உயரிய புனிதத்தன்மையடைந்து இறந்ததால் இவர்களைத் தெய்வமாக கோவில் அமைத்து அப்பகுதி சுற்றுவட்டார மக்கள் வழிபடுகின்றனர். பெண் தெய்வங்களை பயன்பாட்டின் அடிப்படையிலும், குலதெய்வ வழிபாடு (முன்னோர் வழிபாடு) என்றதன் அடிப்படையிலுமே வழிபட்டு வருகின்றனர்.

வன தேவதையாக வழிபடப்படும் பெண் தெய்வங்களின் கொவில்களில் பெரும்பாலும் வடக்கு நோக்கிச் சினங்கொண்ட வக்கிர (கொடூர) நிலையில்தான் அமைந்திருக்கின்றன. சான்றாக கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் உள்ள பத்ரகாளியம்மன் மற்றும் பொள்ளாச்சி ஆனைமலைப் பகுதயில் உள்ள மாசானியம்மன் தெய்வங்கள் வடக்கு நோக்கிய நிலையில் காணப்படுகின்றன. உயிர்ப்பலி வழிபாடு ஒருசில கோவில்களில் மட்டும் காணப்படுகின்றன.

ஆனைமலை மாசாணியம்மன் என்ற பெண் தெய்வ வழிபாட்டுமுறை புராணக் கட்டமைப்பிற்குள்ளம் வைதீகக் கட்டமைப்பிற்குள்ளும் கொண்டு செல்லப்பட்ட காரணத்தால் பலியிடும்

மரபு அற்றுப்போய் விட்டது (மறைந்து விட்டது). பொருட்கள் களவு போனால் கோழியைப் பலியிடும்வழக்கம் சில ஆண்டுகளுக்கு முன்பு வழக்கில் இருந்துள்ளது. இம்முறை பிற சமயத்தாக்கத்தால் தடைசெய்யப்பட்டுவிட்டது. தற்பொழுது தாவர வழிபாட்டின் நீட்சியாக வைதீக மரபின் தாக்கத்தால் மிளகாய் அரைத்துத் (பூசும்)தேய்க்கும் வழக்கம் மட்டும் பரவலாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

## எருமைக்கிடா பலியிடல்

உணவுத்தேடல் மற்றும் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்ட காலகட்டத்தில் உயர்ந்தவை தாழ்ந்தவை என்ற பாகுபாடு இன்றி அனைத்து விலங்குகளையும் எதிர்த்து வேட்டையாடி உணவுசேகரித்தான். அவ்விலங்குகளின் இறைச்சியை உண்டுவந்தான். காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களின் இரண்டாம் நிலையான பயிர்த்தொழிலை மேற்கொள்ளத் துவங்கினான். அத்தகைய காலகட்டங்களில் காட்டெருமை, பன்றி போன்ற வனவிலங்குகளால் பயிர்களுக்கு அழிவு ஏற்பட்டது. நிலப்பகுதியினை நாசம் செய்தன. அவற்றை எப்படிச் சரிசெய்வது என்று தெரியவில்லை. அவற்றை வேட்டையாடத் தொடங்கினான். அடுத்த நிலையில் அவற்றைப்பிடித்து தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து தெய்வத்திற்குப் பலியிட ஆரம்பித்தான். பயிர்களை அழிக்கும் விலங்குகளைப் பிடித்து அவற்றைத் தெய்வத்திற்குப் பலியிட்டால் மீண்டும் அந்த விலங்குகளால் வேளாண்மைப் பயிர்களுக்கு அழிவு ஏற்படாது, என்று கருதிப் பலியிட்டான். காலப்போக்கில் ஏற்பட்ட நாகரீக வளர்ச்சியின் காரணமாக வழிபாட்டில் மாறுதல்கள் உண்டாயின. பெரிய விலங்குகளைப் பலியிடும் முறையில் இருந்து சிறிய விலங்குகளான எருமை, பன்றி ஆகியவற்றையும் பின் ஆடு, சேவல் போன்றவற்றையும் பலியிட்டு வருகிறான்.

'பலியிடல் என்பது தமிழகம், கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் உள்ள நிலத்தின் மைந்தர்கள் எனக் கருதப்படும் பழங்குடியினர் மற்றும் ஆதிக்குடிகளின் தொன்றுதொட்டு வரும் பழக்கம் என ஹென்றி ஒயிட்வெயிட் கூறுகிறார்' (Sivasubramaniyan, 2014).

எருமைக்கிடாய் வழிபாடு மூன்று நிலைகளின் அடிப்படையில் பிரித்தறியப்படுகிறது.

1. வேளாண்மைப் பயிர்களை அழிக்க வந்த விலங்காகக் கூறப்படும் எருமைகளைப் பலியிடுதல்.

2. முன்னோர்களினுடைய வழிபாட்டு மரபின் எச்சங்களைப் பின்பற்றுதல் (சான்றாக கோவை மாவட்டம் பொள்ளாச்சித் தாலுக்கா பனப்பட்டி கிராமத்தில் உள்ள பனப்பட்டி சோலியம்மன் வழிபாடு)

3. விலங்குகளுக்கு நோய் ஏற்பட்டால் கோவிலில் வேண்டி வழிபாடு செய்து நோய் குணமடைந்தால் அதை தெய்வத்திற்கு பலியிடுவதாக வேண்டிக்கொள்ளுதல் இவ்வகையில் ஆண் எருமைக்கிடாயினைப் பலியிடல்.

எருமைகளுக்கு நோய் ஏற்பட்டால் அப்பட்டியில் உள்ள ஆண் எருமைக்கிடா ஒன்றினை கோவிலுக்கு வேண்டி நேர்ந்துவிடுதல் அதன் பின்னர் பட்டியில் உள்ள எருமைகளுக்கு நோய் குணமடைந்தவுடன் மக்கள் தெய்வத்திடம் நேர்ந்து கொண்டதற்கிணங்க அவ்வாண்டு கோயில் திருவிழாவன்று கோயிலுக்கு (நேர்ந்துவிடுதல்) எருமைக்கிடாயினை காணக்கையாக செலுத்துகின்றனர். இவ்வாறு மக்கள் காணிக்கையாகச் செலுத்துகின்ற எருமைக்கிடாக்களை கோயிலில் தெய்வத்திற்குப் பலியிடப்பட்டது போக எஞ்சிய விலங்குகளை ஊர்ப்பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளுக்கு ஏலம்விட்டு அதன் மூலம் கிடைக்கும் வருவாயை கோயில் பொதுக்காரியங்களுக்கு மக்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

ஆய்வுப் பகுதியில் காளியம்மன், சோலியம்மன், பகவதியம்மன் போன்ற தெய்வங்களுக்கு ஆண் எருமை பலியிடப்படுவதாகக் கூறியிருந்தாலும் தற்பொழுது நடைமுறையில் சோலியம்மன் வழிபாட்டுத் தலங்களில் மட்டுமே காணப்படுகின்றன. இங்கு பலியிடப்படும் ஆண் எருமைக்கிடாய்களில் அனைத்தும் வெட்டப்பட்டு மண்ணில் புதைக்கப்பட்டு வழிபாடு

செய்யப்படுகின்றது. எவருக்கும் உணவாகவோ இலவசமாகவோ அதனுடைய மாமிசங்களை அழிப்பதில்லை.

திருப்பூர் மாவட்டம் தொக்குப்பாளையம் கிராமத்தில் எல்லைக்காவல் தெய்வமான முனியப்பன் கோயிலில் எருமைக்கிடா வழிபாடு நடைபெறுகிறது. இதனைப்போன்றே சங்ககாலத்தில் பசுமாட்டினைப் பலி கொடுத்துள்ளனர். வேம்பினடியில் உறையும் தெய்வத்திற்குக் கொழுப்பு (கொழுத்த) நிறைந்த பசுவினைப் பலி கொடுத்துள்ளனர். தாய்வழிச் சமுதாயம் காட்டெருமை போன்ற வன விலங்குகளை எதிர்த்துப் போராடியதன் நினைவே மகிஷாசுரமர்த்தினி கதையின் கருவாகும். எனவே இக்கதையும் காளிவழிபாட்டின் தொன்மைச் சான்று பகர்வதாக உள்ளது.

## ஆட்டுக்கிடாய் பலியிடல்

வழியிட்டு முறைகளில் முதன்மையானதாக இரத்தபலி பழிபாட்டுமுறை மேற்கொள்ளப்படுகிறது. அம்மன்கோயில் வழிபாடுகளிலும் மற்றும் தெய்வ வழிபாடுகளிலும் ஆண் விலங்குகளைப் பலியிடுவதற்கு ஆண்களினால் பெண்கள் மீதான அடக்கு முறையே காரணம் என்பதும், ஆண்களின் அடக்கு முறையினால் பெண்களுக்கு ஏற்பட்ட இந்த இரத்த வழிபாட்டு முறைக்கான காரணங்கள் உளவியல் ஆய்வுகள் முன் வைக்கும் கருத்துக்களான மன அழுத்தம் வழிபாட்டின் போது தெய்வம் இறங்கிய நிலையில் ஆண்களை வாடா, போடா என்று அழைப்பதன் வாயிலாகத் தனது மன அழுத்தத்தைத் தளர்த்துக் கொள்கின்றனர் என்றும் கூறுவது சற்றும் பொருத்தமில்லாதது.

இவற்றில் அடக்குமுறை பற்றிய செய்திகள் உண்மையாக இருக்கலாம். ஏனென்றால் ஆண்கள் குழு வாழ்க்கை முறைக்கம் குடும்ப வாழ்க்கை முறைக்கும் தலைமை வகித்து வந்தனர். அதனால் அவர்களுடைய கட்டுப்பாட்டிற்குக் கீழ் பெண்கள் வாழ்ந்து வந்தனர் என்பதால் வேட்டைச் சமுதாயத்தின் தொடர்ச்சிதான் தற்போதைய இரத்த வழிபாட்டுமுறை. வேட்டைச்சமுதாய காலத்தில் மனிதன் ஆண், பெண் என்று பாகுபாடு பார்த்து வேட்டையாடவில்லை. ஆனால் பிற்காலத்தில் அறிவு வளர்ச்சியடைந்து சிந்திக்கத் தொடங்கிய மனிதன் தனக்குப் பயன்படும் விலங்குகளை அதிகமாக வளர்க்கத் தொடங்கினான். அத்தகைய நிலையில் ஆண்விலங்குகளின் பயன் குறைவாகவே இருந்தது. பெண் விலங்குகள் உற்பத்திச் சாதனங்களாக இருந்ததனால் ஆண் விலங்குகளில் தன்னுடைய தேவைக்கு அதிகமாக இருந்தவற்றைத் தெய்வத்திற்குப் பலியிடுதல் இறைச்சிக்காக விற்பனை செய்தல் என்று பயன்படுத்தத்துவங்கினான். இவற்றின் தொடர்ச்சியாகவே ஆண் விலங்குகளைத் தெய்வத்திற்குப் பலியிடும்முறை மேற்கொள்ளப்படுகிறது.

ஆட்டுக்கிடாய் (ஆண் ஆடு) பலிகொடுக்கையில் பல்வேறு விதமான விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. தெய்வத்தின் நிலைக்கு ஏற்பக் கிடாயின் நிறங்களும் வேறுபடுகின்றன. காவல் தெய்வங்களுக்குச் சுத்தமான கருப்பு நிறக்கிடாய் பலியிடப்படும். தற்பொழுது ஒரு சில பகுதிகளில் இந்நிலை மாற்றம் பெற்றுள்ளன.

## பன்றி குத்துதல்

தெய்வ வழிபாட்டில் பன்றி வேட்டை என்பது சடங்காக இந்திய நாட்டின் பல்வேறு இடங்களில் நடைபெறுகிறது. நாட்டுப்பன்றி பொதுவாக அருவருக்கத்தக்க விலங்காகக் கருதப்படுகிறது. ஆனால்காட்டுப் பன்றியை புனிதமாகக் கருதுகின்றனர். புனித விலங்காகக் கருதப்படும் காட்டுப்பன்றியை இரத்த பலியிட்டு வழிபடுகின்றனர். வேளாண் பயிர்களை அழித்த காரணத்தினாலேயே பன்றியை வேட்டையாடியும் பலியிடும் மரபும் தோற்றம் பெற்றுத் தொடர்ந்து வழக்கத்தில் இருந்து வருகின்றது.

'கொங்கு நாட்டில் பயிரை அழிக்கவந்த பன்றியை வேளாளர் கொன்று விட்டதால் பன்றியைத் தெய்வமாகக் கும்பிடும் வேட்டுவருக்கும், வேளாளருக்கும்சண்டை நடந்திருக்கலாம். அது பின்னர் அண்ணன்மார் வழிபாட்டுச் சடங்கிலும் கலந்து விட்டிருக்கலாம் என்பர்' (Muthukumarasamy, 2002)

பயிர்களைப் பன்றிகள் நாசம் செய்யும் இடங்களில் அவற்றை அழிக்கச் சமுதாயத்தின் ஒட்டுமொத்த ஒத்துழைப்பைப் பெற வேண்டிப் 'பன்றிக்குத்து' கிராம தேவதைக் கோயில் வழிபாட்டுச் சடங்காக நடந்திருக்கக் கூடும். பன்றி குத்துதல் என்னும் சடங்கு காவல் தெய்வ வழிபாட்டில் அதிகளவில் காணப்படுகின்றது. கொண்டு நாட்டில் ஒருசில பகுதிகளில் 'சலகை குத்துதல்' என்ற பெயரில் நடைபெறுகிறது. முப்பூசை வழிபாட்டில் கோழி, ஆடு, பன்றி ஆகியன பலியிடப்படுகின்றன. கருப்பராயன், வேட்டைக்காரன், முனியப்பன், தொட்டித்தான் போன்ற காவல் தெய்வ வழிபாட்டில் முப்பூசை வழிபாடு நடைபெறுகிறது. இரவு நேரங்களில் (நள்ளிரவு) இத்தகைய வழிபாட்டு முறையினை மேற்கொள்கின்றனர்.

## சேவல், கோழி பலியிடல்

இரத்தபலி வழிபாடு செய்யப்படும் அனைத்து கோயில்களிலும் சேவல் வழிபாடு (கோழி வழிபாடு) நடைபெற்று வருகின்றன. ஏனெனில் இதற்கு அப்பகுதி மக்களின் பொருளாதார நிலையே காரணமாக அமைகின்றன. வசதி படைத்தவர்களாக இருந்தால் ஆட்டுக்கிடா பலியிடுகின்றனர். வசதி குன்றிய குடும்பமாக காணப்பட்டால் அவர்கள் குறைந்த பொருள் செலவில் சேவலை வாங்கித் தெய்வத்திற்குப் பலியிடுகின்றனர். பலியிடும் நோக்கம் ஒன்றாக இருப்பினும் பொருளாதார ரீதியாக மனிதனுடைய பின்புலங்களை எடுத்துரைக்கும் வகையில் சிறு மாறுதல்கள் தோன்றுகின்றன. முப்பூசை வழிபாட்டில் சேவல் வழிபாடு முதன்மையிடத்தைப் பெறுகிறது. சேவலைப் பலியிடுதல் 'அடசல் பூசை' எனப்படுகிறது. வசதி படைத்தவர்கள் ஆட்டுக்கிடாயைப் பலியிட்டு உறவினர்களுடன் உண்டு மகிழ்வார்கள். வசதி குறைந்த மக்கள் சேவலைப் பலியிட்டு தன்னுடைய குடும்பத்தினருடன் மட்டுமே வழிபடுவார்கள் என்ற இந்தச் செய்தி தற்கால முதலாளித்துவ ஜனநாயகத்தில் வழிபாட்டு முறைகளும் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டுவரும் நிலையில் மாற்றம் பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டுவதாய் உள்ளது.

## முடிவுரை

முதல் நிலை காலகட்டங்களில் வாழ்ந்த ஆதிமனிதன் வேட்டையாடும் பணியினை முதன்மைப் பணியாக மேற்கொள்ளவில்லை. உணவுப் பற்றாககுறை ஏற்பட்ட காலகட்டங்களில் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே மேற்கொண்டான். மேற்கூறிய நான்கு காரண்ஙகளும் இரத்தப்பலியிடுதலுக்கான சான்றுகளை வெளிப்படுத்துகின்றன. ஆனால் நான்காம் நிலையில் கூறப்பட்ட செய்தி புதிதான கட்டமைப்பைத் தோற்றுவித்து அதனுடன் தொடர்பு படுத்த முற்படுகிறது. தொடக்க காலகட்டங்களில் சமயம் என்ற சொல்லாட்சியே பயன்படுத்தப்படவில்லை. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடுகளும் கடைப்பிடிக்கப்படவில்லை. சங்ககால நூல்களை உற்றுநோக்கினால் வர்ணப்பாகுபாடுகள் (தொழிற்பிரிவு) செய்யம் வேலையின் அடிப்படையிலேயே மக்களை பிரித்துக்கூறினார்கள். அப்படிப்பட்ட நிலையினை பின்பற்றிவந்த மக்கள் எப்படி தெய்வங்களை சமய அடிப்படையில் பிரித்துக் கூறியிருக்கமுடியும். இத்தகைய நிலைபிற சமய ஊடுருவல்களின் பின்னரே தெய்வங்களை வகைப்படுத்தப்பட்டது எனலாம். சங்ககாலத்தில் இத்தகைய சூழல் நிலவும்பொழுது இதற்கு முன்னால் வாழ்ந்த மக்களின் வாழ்வியற் கூறுகளை எவ்வாறு பெருசமயங்களுக்குள் உட்படுத்த இயலும். முதல் மூன்று நிலைகளில் இயற்கை மற்றும் குலக்குறியிலான முன்னோர் வழிபாட்டினை மேற்கொண்டான் என்பதை அறிமுடிகின்றது.

## References

Ganapathiraman, (1986) Thirunelveli Paguthiyil Siru Theiva Valipadu, Thirumagal Nilayam, Thoothukudi, India

Muthukumarasamy, K.N. (2002) Annamar Sami Kathai Oru panmuga Parvai, Kovvai Pulavar Peravai, Coimbatore, India

Sivasubramaniyan, A. (2014) Manthiramum Sadangukalum, Kalachuvadu Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License